**செ. கு. எண்**:66 **நாள்**: 14.2.2012

<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்</u>

<u>அறிக்கை – **14.2.2012**</u>

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், முட்டுக்காடு கிராமத்தில் 12.2.2012 அன்று சென்னையிலிருந்து புதுச்சேரி சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மீது இரு சக்கர வாகனம் மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த சென்னையைச் சேர்ந்த திரு. தனசேகர் என்பவரின் மகன் அஸ்வின்குமார் மற்றும் திரு. மோகனசீனுவாசன் என்பவரின் மகன் தினேஷ்குமார் ஆகிய இருவரும் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த அஸ்வின்குமார் மற்றும் தினேஷ்குமார் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான அஸ்வின்குமார் மற்றும் தினேஷ்குமார் ஆகியோரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.